உ

இணுவில்

# ஸ்ரீ செகராசசேகரப் பிள்ளையார் கோயில்



# சித்திரத்தேர்
# வெள்ளோட்ட விழா மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



இணுவில்

ஸ்ரீ செகராசசேகரப் பிள்ளையார் கோவில்

# சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா மலர்

22-04-1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

மணி யொலியும் வேத ஒலியும் திருமுறை ஒலியும் நாத ஒலியும் நிறைந்து விளங்கும் இணுவைப்பதி மருதநிலப் பாங்குடன் செழிப்புற்றுத் திகழ்கின்றது. ஐரோப்பியர் வருகைக்கு முன் யாழ்ப்பாண இராச்சியம் இருந்ததென்பதற்குச் சான்றாக அம்மன்னர்கள் வழிபட்ட இருகோயில்கள் இற்றைவரை மங்காப் புகழுடன் இவ்வூரில் பொலிவுற்றுள்ளன.

திருக்கோயில் உள்ள ஊரே திருவுடைய ஊர் என்பது பழந் தமிழர் கோட்பாடு. கோயில்கள் நிறைந்த இணுவிலூரில் பரராசசேகர மன்னன் வழிபட்ட பரராசசேகரப் பிள்ளையார் கோயிலும் செகராச சேகர மன்னன் வழிபட்ட செகராசசேகரப் பிள்ளையார் கோயிலும் அமைந்திருந்து இவ்வூரின் பழைமையை வெளிப்படுத்துகின்றன.

இவ்விரு ஆலயங்களுள் செகராசசேகரப் பிள்ளையார் கோயில் இணுவிலூரின் மேற்குப் பகுதியில் சின்னஞ் சிறு கோயிலாய் அமைக்கப் பெற்று, காலப்போக்கில் வளர்ச்சி எய்தி நித்திய நைமித்திக பூசைகளும் இடம் பெறலாயின. ஆண்டுப் பெருவிழாவிலே தேர்த் திருவிழா ஒரு முக்கிய விழாவாகும். ஆரம்ப காலத்தில் சகடையில் கட்டுத் தேர் கட்டியே இழுத்து வந்தனர். பின்னர் அதனைச் சித்திரத் தேராக அமைக்க வேண்டுமென்ற எண்ணம் கோயில் பரிபாலகர், தேர்த் திருவிழா உபய காரர்கள் உள்ளிட்ட அனைவரின் உள்ளத்திலும் உதயமாயிற்று. அதன் விளைவே இவ்வாண்டு தேர்த் திருவிழாவின்போது விநாயகர் ஆரோ கணித்து வீதி வலம் வரவுள்ள சித்திரத் தேராகும்.

சிற்ப சாத்திரங்களுக்கு அமைய இச்சித்திரத் தேரை உருவாக்கத் தோன்றாத் துணையாய் முன்னின்று உதவிய விநாயகப் பெருமானும் இதனை உருவாக்கித் தந்த சிற்பாசாரி கலாகேசரி ஆ. தம்பித்துரை அவர்களும் என்றும் போற்றுதற் குரியவர். வரலாற்றில் இச்சித்திரத் தேரின் வெள்ளோட்ட விழா நிலைபெறுவதற்கு ஏதுவாகச் சித்திரத் தேர் வேள்ளோட்ட விழா மலர் ஒன்று வெளியிடுதல் எதிர்காலத் தலை முறையினர்க்குப் பெரும் பயனளிக்கும் என்பது உண்மை.

ஊரிலுள்ள பெரியோர், சான்றோர், கல்வி மான்களிடமிருந்து ஆசிச் செய்திகளும் கவிதைகளும் பெற்று அடக்கமான அளவில் இவ் வெள்ளோட்ட விழா மலர் வெளிவருகின்றது. இதற்கான பங்களிப்பினை நல்கிய அனைவரும் பாராட்டுக் குரியவர்களாவர். விழா மலரின் அட்டைப் படத்தினை அலங்கரித்துக் கொண்டிருக்கும் சித்திரத் தேரின் "புளொக்கை" ஆக்கியுதவியவர் நாச்சிமார் கோயிலடியைச் சேர்ந்த ந. ஆனந்தன் என்பது குறிப்பிடத்தக்கது. குறுகிய காலத்தில் இம் மலரினை அழகுற அச்சிட்டு உதவியவர்கள் சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தினர். அனைவருக்கும் நன்றி உரித்தாகுக.

பதிப்பாசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன

முதல்வர்

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசார்ய ஸ்வாமிகள்**

வழங்கிய

# ஆசியுரை

**அருட்பெருந்தகையீர்,**

இணுவில் செகராசசேகரப் பிள்ளையார் பெருமானுக்குச் சித்திரத்தேர் அமைத்து, வெள்ளோட்ட விழா எடுக்க விருப்பதறிந்து மட்டில்லா மகிழ்ச்சி. பிரணவ சொருபியாம் விநாயகப்பெருமானுக்கு நாம் ஆற்றும் கைங் கரியங்களெல்லாம், அதி உயர் ஸ்தானம் வகிப்பன. மற்றும் மூர்த்திகள் போலல்லாது எமது பிழைகளை எல்லாம் பொறுத்துத் திருவருள் பாலிக் கும் கருணாமூர்த்தி. எக்காரியத்துக்கும் அவரையே முதலில் வழிபடு கிறோம். மிக எளிய வகையில் வழிபடப்படுபவரும் அவரே. அவரைக் குறிக்க ஒரு கோமய உருண்டை, ஒரு மஞ்சள் உருண்டை போதும் அவரின் திருவருட்கடாக்ஷம் பெற்றுய்ந்தவர்கள். ஔவைப் பெருமாட்டி முதல் அளவிலா அடியார்கள் பலர். இனி, தேர் என்பது இந்நிலை யிலா மானுட வாழ்க்கையைத் தேர்ந்து கொள் என்பதாகும். அதன் அமைப்பில் பலப்பல தத்துவார்த்தங்கள் உள. பிரபஞ்ச வடிவமே இரதம். மேல் விதானத்தில் ஆறு ஆதாரங்கள். கீழ்த்தளத்தில் மானுட வாழ்க்கையின் பிறப்பு முதல் இறப்பு வரை சித்திரிக்கும் சிற்பங்கள், மூலமூர்த்தியின் வரலாறுகள் ஆதியன. இதனை அமைத்துதவிய கலாகேசரி. ஸ்தபதியார் ஆ. தம்பித்துரை அவர்களைப் பாராட்டுகிறோம்; வாழ்த்து கிறோம். மற்றும் பலவகையாலும் தொண்டுகள் புரிந்தவர்களுக்கும், நிதி உதவி ஈந்த அன்பர்களுக்கும், மற்றும் எல்லோருக்கும் விநாயகப் பெருமானின் திருவருளை உளமார வேண்டி, எமது மனமார்ந்த நல்லாசி களை வழங்குகிறோம் — "என்றும் வேண்டும் இன்ப அன்பு."

09 - 04 - 1994

**ஸ்ரீலஸ்ரீ குருமஹா சந்நிதானம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதி துணை

# பெருமைவாய்ந்த பிள்ளையார்

இணுவில் பருத்தியடைப்பு, புண்ணிய பதியில் அருள்பாலிக்கும் செகராசசேகரப்பிள்ளையார் கோயில் மஹோற்சவ ரத உற்சவ புதிய சித்திரத் தேர் வெள்ளோட்ட விழாவுக்கு நல்லாசிகள்.

குழந்தைப் பிள்ளையார், பெருமைவாய்ந்த பிள்ளையார், அருட் பிள்ளையார், எல்லோருக்கும் அருள் கொடுத்துக் காத்து வரும் பிள்ளையார், வேண்டுவோர் வேண்டியதைக் கொடுக்கும் தெய்வம். சிறுகக் கட்டிப் பெருக வாழ் என்னும் உவமைக்கு ஏற்ப இன்று பெரும் அருள் ஆட்சி புரிகின்றார். இது நாம் செய்த பாக்கியம் எனலாம். புண்ணிய தெய்வகாரியங்கள் செய்வதற்கும் புண்ணியம் வேண்டும். அந்தப் புண்ணியத்தின் பேறால் தேர்த் திருவிழா உபயகாரர் பெரும் முயற்சி எடுத்து எம்பெருமான் பவனிவர தேர் ஒன்று அமைப்பதற்குப் பிள்ளையாரின் திருவருளும் ஆலய அறங்காவலரின் ஒத்துழைப்பும் அடியார்கள் அவாவும் பக்தியும் பொருள் உதவியும் சிற்பாசாரியர் திருவாளர் ஆ. தம்பித்துரையின் பொறுப்பும் காரணமாகின்றன.

எம்பெருமான் அழகாக வலம் வருவதற்குத் தனது கலைத்திறமை, நுட்பம், வர்ணம் எல்லாம் அழகுற அமைத்து இன்று வெள்ளோட்ட விழாவாகத் தருகின்றார் தம்பித்துரை அவர்கள். எல்லோரும் எல்லாச் சிறப்பும் பெற்று நீடூழி வாழ்க என அவன் திருவடி வணங்கி எல்லோருக்கும் எனது நல்லாசிகளைத் தெரிவிக்கின்றேன்.

**சிவஸ்ரீ இராமநாத ஸ்ரீதரக்குருக்கள்**
ஆலய பிரதம குரு

ஸ்ரீ செகராசசேகரப் பிள்ளையார் கோயில்,
இணுவில்.
*16 - 04 - 1994*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாகேசரி தம்பித்துரையின் கைவண்ணம் மேலும் மெருகூட்டப்படும்

சரித்திரப் பிரசித்தி பெற்றுச் சைவ மணம் கமழும் இணுவில் செகராசசேகரப் பிள்ளையார் கோயில் சித்திரத் தேர் வெள்ளோட்டம் 22-04-1994 அன்று நடைபெறத் திருவருள் பாலித்திருப்பது அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி யடைகிறேன். இத் திருப்பணியில் சிற்பி, கலாசேகரி ஆ. தம்பித்துரை அவர்களின் கைவண்ணம் மேலும் மெருகூட்டப்படும் என்பதில் எனக்கு எதுவித சந்தேகமுமில்லை. அவருடன் சேர்ந்து பணியாற்றிய சகல தொண்டர்களும் போற்றப்பட வேண்டியவர்கள்.

22-04-1994 அன்று நடைபெறும் சித்திரத் தேர் வெள்ளோட்ட நிகழ்ச்சியின் போது சகல இந்துக்களும் கலந்து கொண்டு அவனருள் பெற வேண்டுமென வேண்டி நிற்பதோடு, இவ்வுற்சவம் இனிதே நடைபெறுவதற்காவும் அவனருள் வேண்டி நிற்கிறேன்.

யாழ். மாவட்டம்
16 – 04 – 1994

**கா. மாணிக்கவாசகர்**
அரசாங்க அதிபர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவில்

## செகராசசேகரப் பிள்ளையாருக்கு

# ஒரு சித்திரத்தேர்

செந்தமிழ் மொழியும் சைவ நற்சமயமும் வளரும் பொருட்டு உழைத்த நாவலர் பெருமான் அவதரித்த நமது நாட்டிலே, சைவாலயங்களும் வித்தியாலயங்களும் நிறைந்து விளங்கும் பதி இணுவிலம்பதி. இங்கு கம்பீரமாகக் காட்சி தருகின்ற இராசகோபுரங்கள் ஆலயங்களுக்கு அழகு செய்கின்றன. கற்றோர் பலர் வாழ்ந்த கிராமம்; இப்பொழுதும் வாழ்கின்ற கிராமம்.

இங்குள்ள ஆலயங்களில், பருத்தியடைப்பு என்னும் குறிச்சியில் கோயில் கொண்டு எழுந்தருளியிக்கின்றார் செகராசசேகரப்பிள்ளையார். செகராசசேகர மன்னனை நினைவூட்டும் வகையில் அமைந்த திருவாலயம் இது. பெரிய திருவிழா என்று விதந்து கூறப்பெறும் மகோற்சவம் இவ்வாலயத்தில் வருடா வருடம் நடந்து வருவது யாவரும் அறிந்தது.

மகோற்சவங்களில் முக்கியமான தொரு விழா தேர்த்திருவிழா. இவ்விழா பஞ்சகிருத்தியங்களில் ஒன்றான அழித்தற்றொழிலைக் குறிப்பது. அழித்தல் — ஆணவத்தை அழித்தல்

ஓங்கார மூர்த்தியாகிய செகராசசேகரப் பிள்ளையார் ஆரோகணித்து அடியார்களுக்கு அருளும் வண்ணம் புதியதொரு சித்திரத் தேரினைச் சைவ மெய்யடியார்கள் உருவாக்கி இருப்பதை அறிந்து பெரிதும் மகிழுகின்றேன். தேரை உருவாக்கும் பணியில் அநுபவம் வாய்ந்தவரான கலாகேசரி ஆ. தம்பித்துரை அவர்களின் தலைமையில் சிற்பிகள் உழைத்ததை அறியும்பொழுது குறித்த மகிழ்ச்சி இருமடங்காகிறது.

புதிய சித்திரத் திருத்தேரினை உருவாக்குவதற்குப் பல்வேறு வழிகளிலும் உதவிபுரிந்த அன்பர்கள், உபயகாரர்கள் உள்ளிட்ட அனைவரும் பாராட்டுக்கு உரியவர்களே; பெரும் பாக்கியசாலிகளுமாவர்.

விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதனாக இருப்பவர் செகராசசேகர விநாயகர். அவருக்கென உருவாக்கிய சித்திரத்தேரின் வெள்ளோட்ட விழா, சாஸ்திரோக்தமாக அமையும் வண்ணம் எல்லாம் வல்ல விநாயகரின் திருவடிகளை இறைஞ்சுகின்றேன்.

அ. துரைராசா
துணை வேந்தர்

பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
20 - 03 - 1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

இறை அன்பும் வழிபாடும் பெருகி வளரும் ஒரு காலத்தில் நாங்கள் இன்று வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இதனாலேயே இந் நாட்டு ஆலயங்கள் எல்லாம் இன்று திருப்பணிகளினாலும் திரு விழாக்களினாலும் சிறப்படைகின்றன என்று கூறினால் அதில் மிகையொன்றுமில்லை. இணுவில் பதியில் அருட்காட்சி தரும் திருக்கோயில்கள் அனைத்தும் வரலாற்றுச் சிறப்பு மிக்கவை. இவற்றில் ஸ்ரீ செகராசசேகரப் பிள்ளையார் ஆலயம் இந்நாட்டில் அரசு புரிந்த தமிழ் மன்னர் ஆட்சியில் இணைந்தது. "நாமிருக்கும் நாடு நமது" என்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் எமது சைவப் பண்பாட்டுச் சின்னங்களாகிய திருக்கோயில்களைப் பேணும் கடமைக்கு உட்பட்டுள்ளோம்.

இணுவில் வாழ் சைவமக்கள் இக்கடமையில் முன்நிற்பவர்கள். கோயிற் திருப்பணியை உயிராக நேசிப்பவர்கள். இந்த வகையில் இன்று விநாயகப் பெருமானுக்கு அழகும் கலையம்சமும் வாய்ந்த ஒரு சித்திரத் தேர் உருவாக்கப்பட்டு வெள்ளோட்ட விழா நடை பெறுவது மிகவும் பாராட்டுக்குரியது. திருத்தேரில் இருந்து பவனி வரும் பெருமான் அன்பர்களின் உளத் தேரிலும் நீங்காத காட்சியைக் கொடுத்து ஆனந்தமடைய வைப்பானாக என்று பிரார்த்தித்து இப் பணியில் ஈடுபட்ட அனைவரையும் வாழ்த்தி அமைகின்றேன்.

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.

**செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J. P.**
தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

யாழ்ப்பாணத்திற்கு அருகில் உள்ள இணுவில் இயற்கை வளம் நிறைந்ததும் தெய்விகச் சிறப்புகளுடன் கூடியதுமாகிய திருத்தலம். இப்பிரதேசத்தின் இலக்கிய வளத்திற்கு முத்தமிழ் வல்ல அறிஞர்களும் ஆன்மீக வளத்திற்குத் துறவிகளும் சிறந்த பணியாற்றியுள்ளனர். வரலாற்றுப் புகழ்மிக்க ஆலயங்கள் இங்கு மக்களது பண்பாட்டு நலனுக்கு நிலைக்களனாக விளங்கி வருகின்றன. பண்டைய அரசர்களாகிய பரராசசேகரன் பரராசசேகரப்பிள்ளையாரையும் செகராசசேகரன் செகராசசேகரப் பிள்ளையாரையும் வழிபட்டு மேன்மை அடைந்துள்ளனர். சைவச் சான்றோர்கள் நிரம்ப வாழும் இணுவிலில் எண்ணற்ற அடியார்கள் செகராசசேகரப் பிள்ளையாரின் திருவருளுக்குப் பாத்திரராகி உள்ளனர். இத்தகைய பல்துறைப் பண்பாட்டுச் சிறப்புக்கொண்ட இத்தலத்தில் கோயில் கொண்டெழுந்தருளி அருள்பாலிக்கும் செகராசசேகரப் பிள்ளையாருக்கு அவனது திருவருளினால் கலைத்துவம்மிக்க சித்திரத் தேர் ஒன்று தேர்த் திருவிழா உபயகாரர்களினால் அடியார்களது உதவியுடன் உருவாகி வருகின்றமை எம் அனைவருக்கும் மகிழ்ச்சி யளிக்கின்றது.

விநாயகப் பெருமானுக்குப் புதிதாக அமைக்கப் பெற்ற சித்திரத் தேரின் வெள்ளோட்டம் 22 - 04 - 1994 வெள்ளிக்கிழமை நடைபெறத் திருவருள் கிட்டியுள்ளது.

ஆலயங்களில் நிகழும் நைமித்திகக் கிரியைகளில் ஒன்றாகிய மகோற்சவத்தின் போது தேர்த் திருவிழா பிரமோற்சவம் எனச் சிறப்புப் பெறுகின்றது. ஆன்மாக்களைப் பீடித்துள்ள ஆணவ மலத்தை நீக்கிக்கொள்ளத் தேர்த்திருவிழா அடியார்களுக்குச் சிறந்த வாய்ப்பையளிக்கின்றது. உயிருக்குயிராக விளங்கும் இறைவன் தேரில் எழுந்தருளி அருள்பாலிக்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

தேர்த்திருவிழா இறைவனுக்குரிய சிறந்த இராஜோபசாரமாகும். தேர், அசைந்து பவனிவரும் அமைப்பைக்கொண்ட கோயில் எனக் கூறலாம். தேரில் இடம் பெற்றுள்ள கலைச் சிறப்புமிக்க சிற்பங்கள் இறைவனது தெய்விகப் பெருமைகளைச் சித்திரிக்கின்றன. இறைவனுக்குரிய திருப்பணிகளில் மனமுவந்து ஈடுபடும் அடியார்களுக்கு உயர்பேறு சித்திக்குமென்பது சாஸ்திர உண்மையாகும். சிறந்த திருப்பணியாக அமையும் இச் சித்திரத்தேர் விநாயகர் அடியார்களது பக்தியின் சின்னமாக எம்பெருமானுக்கு அர்ப்பணிக்கப்படுகின்றது. தேரில் எழுந்தருளி இறைவன் பவனி வரும்போது அடியார்கள் அனைவரும் எத்தகைய வேறுபாடுமின்றித் தேரின் வடத்தைத் தொட்டு இழுத்தலினால் தமது பிறவிப்பிணி நீங்கும் வகையில் இறைவனது திருவருளுக்கு உரியவராகின்றனர். மக்கள் அனைவரும் பக்தியினால் ஒன்றுபட்டு நிறைவாழ்வு வாழத் தேர்த்திருவிழா பெரிதும் துணை புரிகின்றது.

கலைத்துறையில் ஆற்றல் வாய்ந்த கலைஞர் சிற்பக் கலாகேசரி ஆ. தம்பித்துரையின் கைவண்ணத்தில் இத்தேர் உருவாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இத்தேரினை உருவாக்கும் கைங்கரியத்தில் ஈடுபட்டுள்ள கலைஞர்களுக்கும் அடியார்கள் அனைவருக்கும் எல்லாம் வல்ல விநாயகப்பெருமானின் திருவருள் பொலிவதாகுக.

எம்பெருமானின் சித்திரத்தேர் வெள்ளோட்டம் எதுவித இடையூறுமின்றிச் சிறப்புற நிகழவும் தேர்த்திருவிழா சிறப்புற நடைபெறவும் செகராசசேகரப் பிள்ளையார் அருள்பாலிப்பாராக.

**கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்**

இந்து நாகரிகத் துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி. 12 - 04 - 1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் ஸ்ரீ செகராசசேகரப் பிள்ளையார் கோயில்
# புதிய சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா - மலர்
# அறிமுகவுரை

இற்றைக்கு ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாண அரசு நிகழ்ந்த காலத்தில் நல்லூரில் இருந்து தமிழீழ அரசு நடாத்திய செகராசசேகர மன்னனால் தாபிக்கப் பட்டது பருத்தியொல்லை என்ற குறிச்சியில் இணுவிலில் கோயில் கொண்ட செகராச சேகரப்பிள்ளையார் கோயில். இதனைப் '' பருத்திப் பிள்ளையார் '' எனச் சுருக்கமாக வழங்குவர்.

இக்கோயில் ஏறக்குறைய நானூறு ஆண்டுகள் வளர்ச்சிப் பருவத்தில் இருந்தது. அக்காலத்தில் வேதாரணியம் குருபரம்பரையினர் கோயிலைப் பராமரித்துப் பூசை நடத்தி வந்தனர். 1930ஆம் ஆண்டளவில் இக்கோயில் பூசகராக இருந்த சுப்பிரமணி யக் குருக்கள் வேதாரணிய குருபரம்பரையினராவர். அவரின்பின் இக் கோயிலை இணுவில் கந்தசாமி கோயிற் குருக்களாக இருந்த சிவஸ்ரீ சோமசுந்தரக் குருக்கள் (சின்னன் ஐயர்) பூசைப் பொறுப்பை ஏற்றார். இவரை இக்கோயிலின் அப்போதய பரிபாலகராக இருந்த திரு. சி. சங்கரப்பிள்ளை அவர்கள் நியமித்தார்.

அப்பொழுது கோயில் சாதாரண நிலையிலிருந்ததால் கல்லால் புனர் நிர்மா ணம் செய்யத் திருவருள் கூட்டியது. 1935ஆம் ஆண்டளவில் இக்கோயிற் திருப்பணி ஊர வர்கள் உதவிய பிடியரசி, மற்றும் உதவு தொகை கொண்டு அராலி நாகமுத்து ஆசாரி யினால் மூலஸ்தானம் கட்டிக் கும்பாபிஷேகம் செய்யப் பெற்றது. அபிஷேக மண்டபம், தம்ப மண்டபம், வசந்த மண்டபம் முதலியவை அதனைத் தொடர்ந்து கட்டப்பட்டன. இப்புனரமைப்புகள் நிறைவேறிய பின்னர் கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மண்டலா பிஷேகம் பத்து நாட்கள் நடைபெற்றன. அதனை அலங்காரத் திருவிழாவாக அமைத்து 1935ஆம் ஆண்டிலிருந்து நடத்தப்பட்டு வந்தது.

அக்காலத்துப் பரிபாலகரான திரு. சி. சங்கரப்பிள்ளை 1947ஆம் ஆண்டு ஆவணி மாதம் எங்கள் தந்தையார் காலஞ்சென்ற நாராயணர் இராமுப்பிள்ளை அவர்களை அணுகி இத்தேர்த் தினத்தைப் பொறுப்பெடுத்து உபயம் செய்யுமாறு கேட்டுக்கொண் டார். செகராசசேகரப் பெருமானை எங்கள் தாயாரும் தந்தையாரும் தமது குல தெய்வமாக வணங்கி வந்தனர். தாங்களும் பிள்ளைகளும் இந்த உபயத்தைப் பொறுப் பேற்பதாக உத்தரவாதம் அளித்தனர். கமுகஞ் சலாகை, பனஞ் சலாகைகளால் ஆசாரி வீரவாகு துணையுடன் முன் போலச் சகடைத் தேரை உருவாக்கி ஐந்து ஆண்டுகளாகத் தேர்த் திருவிழா நடந்தேறியது.

மூத்த சகோதரர் பண்டிதர் இ. இராசலிங்கமும் தம்பி பண்டிதர் இ. திருநாவுக்கரசு மற்றும் தம்பிமார் இருவரும் சேர்ந்து தமது சொந்த நிதி கொண்டு திரு. வீரவாகு ஐயாத்துரை ஆசாரி துணையுடன் இதுவரை ஓடிவந்த கட்டுத் தேரை உருவாக்கி அன்று முதல் தேர்த் திருவிழாவைச் சிறப்பாகச் செய்து வந்தார்கள். பிள்ளையார் திருவருளால் நாங்களிருவரும் கல்லூரி அதிபர்கள் ஆனோம். எங்கள் தம்பியார் திரு. இ. இராசரத்தினம் அஞ்சல் அதிபரானார். இளைய தம்பியாரான திரு. இ. சுந்தர லிங்கம் பரீட்சை அத்தியட்சரானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் பரிபாலகரான திரு. ச. சின்னத்துரை அவர்கள் எங்களை அணுகி (1987ஆம் ஆண்டளவில்) '' நீங்கள் ஒவ்வொருவருமே தனித்துத் தேர் செய்யக் கூடிய பாக்கியத்தை ஸ்ரீ செகராசசேகரப் பிள்ளையார் உங்களுக்குத் தந்துள்ளார். ஸ்ரீ செகராசசேகரப் பிள்ளையார் ஆரோகணித்து அடியார்களுக்கு அருள் புரிகின்ற கண்கொள்ளாக் காட்சியினை அடியார்கள் பார்த்து மகிழ்வதற்கு வாய்ப்பாகச் சகல வேலைப்பாடுகளுடன் கூடிய அழகியதொரு சித்திரத் தேரைச் செய்து வையுங்கள். பிள்ளையார் உங்களுக்கு மேலும் மேலும் சகல சௌபாக்கியங்களையும் தந்தருளுவார் '' என்றார்.

திரு. ச. சின்னத்துரை அவர்களது வாக்கைச் செகராசசேகரப் பிள்ளையார் வாக்காகக் கொண்டு புதியதொரு சித்திரத் தேரை உருவாக்கும் பணியில் அங்குரார்ப்பண விழா இடம்பெற்றது. இதற்கமைய 10 – 11 – 1989இல் அச்சேற்றும் பணி இடம்பெற்றது. உற்றார், உறவினர், ஊர் மக்கள், நண்பர்கள் உவந்தளித்த நிதி உதவியோடும் பொருள்கள் உதவியோடும் தேர்த் திருப்பணி தொடர்ந்தது. ஊர் மக்கள் இத்தேர்த் திருப்பணிக்கு ஒரு பகுதி மரங்களை மனமுவந்து அன்பளிப்புச் செய்தார்கள். நாட்டு நிலைமை காரணமாக இச் சித்திரத் தேரை அழகு பெற அமைத்துப் பூர்த்தி செய்ய ஐந்து ஆண்டுகள் வரை சென்றன.

செகராசசேகரப் பிள்ளையாரின் திருத்தேர் அழகு பெற அமைவதற்கு வந்து வாய்த்தவர் கலாகேசரி ஆறுமுகம் தம்பித்துரை அவர்கள் ஆவர். நமது நாட்டில் பல சித்திரத் தேர்களை உருவாக்கிப் பேரும் புகழும் பெற்ற கலைஞர் கலாகேசரி தம்பித்துரை அவர்கள். ஸ்ரீ செகராசசேகரப் பிள்ளையாரின் சித்திரத் தேர் நிர்மாண வேலைகளில் பிரதம சிற்பியாக அமைந்ததும் பிள்ளையாரின் திருவருளே. உலகு என்றும் புகழத்தக்க வகையில் அழகியதொரு சித்திரத் தேரை, கலாகேசரி திரு. ஆ. தம்பித்துரை அவர்கள் உருவாக்கித் தந்துள்ளார்கள். அவருக்கு என்றென்றும் நாம் நன்றி செலுத்துவோமாக.

சித்திரத்தேரை உருவாக்குவதற்கு ஆரம்பத்திலிருந்து தம்மை முற்றாக அர்ப்பணித்தவர் சகோதரர், இளைப்பாறிய அஞ்சல் அதிபர் இ. இராசரத்தினம் என்பதும், முன்னைநாள் கல்விப் பணிப்பாளரும் இளைய சகோதரருமான இ. சுந்தரலிங்கம் இத் திருப்பணிக்கு ஏற்பட்ட செலவின் பெரும் பகுதியை ஏற்றார் என்பதும் குறிப்பிடத்தக்கவை.

குறித்த சித்திரத்தேரை உருவாக்குவதற்குப் பலரும் பல வழிகளிலும் உதவியிருக்கின்றார்கள். அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**பண்டிதர், வித்துவான் இ. திருநாவுக்கரசு**
*[ தேர்த்திருவிழா உபயகாரர்கள் சார்பாக ]*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளங்குளிர வருவாய் போற்றி

**செகராச சேகரச் செல்வக் கணேசா**
**அகிலாண்ட கோடிக் கதிபா—சுகஞான**
**பூரணனே நல்லிணுவிற் பொற்கோயில் வீற்றிருக்கும்**
**காரணனே நின்னடிகள் காப்பு.**

※

மன்னவனாம் செகராச சேகரன்முன்
வழிபட்டுத் தினம்தொண்டு புரிந்தகாலை
அன்னவனின் துயர்போக்கிக் காட்சிகாட்டி
அளப்பரிய சித்தியெலாம் தந்ததேவா,
நின்னருளால் செகராச சேகரப்பேர்
நிறைந்த வைத் தியநூலும் சோதிடத்தேன்
உன்னுசெக ராசசே கரமாலையுமிங்
குதிப்பதற்குத் திருவருள்செய் தமர்ந்தகோவே

மருவுபுகழ் இணுவையூர் வளஞ்செழிக்க
வளர்கலைஞர் இசைவாணர் கவிஞர்,கற்றுத்
திருவுடைய சான்றோர்கள், தேசத் தொண்டர்
சிவபக்தர் ஞானியர்கள் புராணவல்லோர்
கருணைவிதிச் சதுர்மறையோர் பெருக, நின்றன்
கண்ணருளால் எமைக்காக்கும் ஞானக்கொம்பா,
உருவழகுப் புதியநவ மணித்தேர் மேவி
ஒளிமலர உளங்குளிர வருவாய்போற்றி

சீரடியார் வந்துதவத் தெய்வசிற்பி
திருத்தம்பித் துரைக்கலைஞன் ஆக்கித்தந்த
தேரினிலே சிங்காரக் கொலுவிருக்கும்
செகராச சேகரவி நாயகர்தம்
பேரருளால் தமிழ்சிறந்து கலைசிறந்து
பேணுசிவ நெறிசிறந்து தருமம்செல்வம்
தாரிணுவில் நிலைசிறந்து பண்புநீதி
சமாதானம் சிறந்தோங்கி வாழிவாழி.

ஸ்ரீநாக வரதநாராயணர் தேவஸ்தானம்,
அளவெட்டி.

**அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# வியத்தகு சித்திரத்தேர்

உண்ணீர் உவக்கும் உழுதூண் பெருக்கும் மாண்புறு மருதம் இணுவையம்பதி. கண்ணெனும் கல்வி பெறுதற்கு உகந்த திருவிடமென மேற்குலகோர் தேர்ந்த திருவிடம். இசையும் தமிழும் இணைந்து வாழ இலங்கு நீறு துலங்கும் மேனியர் பொலிந்து வாழ்ந்த, வாழும் புண்ணிய பூமி. ஈழத்துத் திருவாரூர் என இயம்பும் இணுவையம்பதியில் நாளெலாம் நல்லிசை தவழும் தேவாலய மணியோசை வேதமோதும் வேதியர் தருமொலி, விளை நிலப்பரப்பில் இதமுற எழும்பும் கறவையின் கனிவொலி, கூட்டு முயற்சியில் நாட்டுயர்வுறும் கார்சார்ந்த ஏராளர்களிப்பினால் எழுமொலி கலந்தார்ப்ப, ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே என்று இறை நுகர் இணுவை ஈழத்தில் கண்ணெனலாம். இத்தனைக்கும் எழுவான் இரவியாய், இமையவர் துயர்களைந்த, பெண் சுமந்த மேனியன் பெரும் பேறாய் வந்துதித்து பழம் பெற்ற முன்னைப் பழம்பொருள் பஞ்சமுகவிநாயகன் - சேகராச சேகரன் - சிந்தை குடிகொண்ட நற்குஞ்சரக்கன்று எழுந்தருளும் பருத்தியொல்லை புண்ணிய பூமியே.

பருத்தியொல்லை செகராசசேகர மன்னன் வாழ்ந்த திருவிடம். வாழ்வாங்கு வாழ்ந்த மன்னன் செகராசசேகர மாலை என்னும் மெய் நோய் போக்கும் நன்னூலும், செகராசசேகரம் என்னும் விண்மீன் விளைக்கும் தன்மை பகரும் சோதிட நூலும் தந்தான். மன்னன் மரபில் வந்த இற்றைச் சான்றோர் நெற்றிக் கண்ணன் மகனை நெஞ்சிருத்தி நெக்குருகித் துதிசெய்யும் பெற்றி போற்றற் குரியதே. இத் தீதறு வினையால் திருக்கோலச் சித்திரத்தேர் செய்யும் முனைப்பு எம்மனோர்க்கு இதய தாகமாயிற்று.

> ''வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
> உள்ளத் தனைய துயர்வு''

என்ற குறளடிக் கொப்ப அடையா நெடுங்கதவும் அஞ்சலென்ற சொல்லும் உடைய செம்மனத்தார் செயற்பாட்டால் வசந்த காலச் சித்திரையில் விக்கின விநாயகன் சித்திரத் தேரில் வீதி உலாவர ஏதுவாயிற்று.

கோயில் வளர்ச்சிக்கு வளம் சேர்த்த வள்ளன்மைசார் உள்ளங்களுக்கு நன்றி சேர்ப்பது நற்றமிழர் கடனாகும். கைவினைப் பெரியோன் கலாகேசரியின் கைவண்ணம் துண்ணெனத் தெறிக்க ஆக்கப்பாடான வியத்தகு சித்திரத் தேர் காணும்போதெல்லாம் கலாகேசரியின் பெருமை நெஞ்சங்களில் நிழலாடும்.

இத்தேர்ப்பணியான நற்பணி முந்துற பல்வேறு வழிகளில் மனங்கொண்டுதவிய செம்மனத்தார்க் கெல்லாம் பஞ்சமுக விநாயகன் அஞ்சலென்ற அபயகர கடாக்ஷம் கிடைக்க எண்ணுவதல்லால் உபயகாரர்களாகிய எம்மால் வேறு செயற்பாலதொன்றுண்டோ!

விநாயக ரதம் விளங்கு மெழில்போல், பருத்தியொல்லை வாழ் மக்கள், மன்னன் இருக்கை மாட்சி பெற்றதற்கமைவாய், மாண்புற்றிலங்க வேண்டுவார் வேண்டும் வரங்களெல்லாம் வாரி வழங்கும் விநாயகனடிபணிந்தின்புற்றிருப்போமாக. சிவசேவை சீவசேவை என்பதை விநாயகன் அடியார்கள் என்றும் உள்ளத்திருத்தித் தொண்டு செய்துய்வராக. முயன்ற திருப்பணி முட்டற முற்றுற அருளிய கருணைமாகடல் செகராசசேகரன் கழல் என்றும் சரண்புகுவமே!

இரா. சுந்தரலிங்கம்
16 - 04 - 1994 (முன்னைநாள் கல்விப் பணிப்பாளர் - வடமாநிலம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஸ்ரீ செகராஜசேகரப் பிள்ளையார் துணை

இணுவில் ஸ்ரீ செகராஜசேகரப் பிள்ளையார் ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பெற்ற சித்திரத்தேர் வெள்ளோட்ட விழாவின் போது, தேர்த்திருவிழா உபயகாரரும், விநாயகர் அடியார்களும் சேர்ந்து, சித்திரத்தேரை உருவாக்கிய சிற்பக் கலைஞர்

## ஸ்ரீ ஆறுமுகம் தம்பித்துரை அவர்களைப்

பாராட்டி

**22-04-1994** அன்று

**"சிற்பகலாதிலகம்"**

எனச் சூட்டிய **கௌரவ விருது**

*செந்தமிழும் சைவமதம் சீலம் ஓங்கும்*
*செழுமிணுவைப் பதியினிலே கோயில் கொண்ட*
*தந்திமுகன் செகராஜ சேக ரனாம்*
*தண்ணருளின் பிள்ளையாரும் பவனி வரச்*
*சுந்தரஞ்சேர் சித்திரத்தேர் சமைத்த ளித்தான்*
*சிற்பகலா வித்தகனாம் **தம்பித் துரை***
*விந்தைமிகு சித்திரத்தேர் வியக்கத் தந்த*
*விந்தைமிகு **தம்பித்துரை** நீடு வாழி!*

*சிற்பகலா தத்துவங்கள் சிறப்பாய் ஆய்ந்தே*
*சிற்றுளியால் கலைவடிவ உயிர ளித்தான்*
*விற்பனனாம் **தம்பித்துரை** வியன் தமிழின்*
*வேதவிதி முறையாகத் தேர்ப டைத்தான்*
*கற்பவை கசடறக் கற்ற செல்வன்*
*கலையுள்ளம் ததும்புமெழிற் பெருங்க லைஞன்*
*அற்புதக் கலைஞனிவன் ஆனை முகன்*
*அருளாலே பல்லாண்டு வாழி! வாழி!!*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்திமுகன் செகராஜ சேக ரனாம்
    ஆனைமுகன் வீதியுலாப் பவனி வரக்
கைத்திறனால் கைவண்ணக் கலைத்தி றனால்
    கலையொழுகு எழில்வடிவ ரதம மைத்தான்
இத்தலத்தில் பக்தியொடு கலையின் சேவை
    இன்பமொடு இணுவையூர் போற்றத் தந்த
சித்திரத்தேர் நிர்மாணக் கலைஞ னுக்கே
    "சிற்பகலா திலகம்" என விருது தந்தோம்,

"சுபம்"

இங்ஙனம்

இணுவில் மேற்கு.
22 - 04 - 1994

தேர்த் திருவிழா உபயகாரர்கள்

ஆக்கம்:

"கவிமாமணி"
இணுவில் **பிரம்மஸ்ரீ ந. வீரமணிஐயர்**

---

உ

## மகிழ்ந்தூர்ந்து போழிந்து வாழி!

பூமண்ட லம்உயர் தேராக நான்முகன்
    புனிதசா ரதியு மாகப்
பொங்குமுயர் நால்வேதம் குதிரைகள் ஆகவிப்
    புவனத் துயிர்கள் யாவும்
வேதண்ட பகிரண்டம் விண்மண்டலம் பூமி
    விளங்காதி கூர்மம் முதலாம்
மேயபுவ னப்பதிகள் பொருந்தியுயர் கலைகள்மலி
    புனிதசித் திரத்தேர் இதோ!
மூதண்டம் முதலுலக வடிவுகுறு மூனிபோல
    முழங்குகலை யழகு கொண்டு
மூன்னியுளக் கோயிலில் குடிகொண்ட விநாயகன்
    மகிழ்ந் தூரும் மணித்தேர் இதோ
மாதங்க வடிவுகொள் பஞ்சமுக விநாயகன்
    மகிழ்ந்தூரும் மணித்தேர் இதோ
மக்களுறு துயர்தீரச் சித்திரத் தேரிதனை
    மகிழ்ந் தூர்ந்து பொலிந்து வாழி.

இ. இ.

உ

# திருத்தேர் மகிமை

**தேவாலயம் :**

தேவாலயமாவது எங்கும் வியாபகராய் மறைந்திருக்குங் கடவுள் தம்மை ஆன்மாக்கள் வழிபட்டு உய்யும் பொருட்டுச் சாந்நித்தியராய் எழுந்தருளியிருக்கும் இடமாம் என்று ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் நான்காம் பாலபாடத்தில் விளக்கியுள்ளார்கள். கடவுளது திருவடியில் ஆன்மா லயிப்பதற்கு உரிய இடம் அல்லது ஆணவமலம் அடங்குவதற்குரிய இடம் என்று பொருள் கோடலுமொன்று. ஆலயங்கள் நித்தியம், நித்தியாங்கம், நைமித்திகம், நைமித்தியாங்கம், காமிகம், காமிகாங்கம் என்னும் "ஆறு உறுப்புக்களானும்" நடத்தப்படும். நைமிகத்துள் ஒன்று தான் மகோற்சவம்

**உற்சவம் :**

"உற்சவம் என்னும் சொல்லுக்குப் பல கருத்துக்கள் உண்டு. (உத்-மேலான, சவம்-ஐந்தொழில்; உத்-ஞானம், சவம் போக மோட்சம்) மேலான ஞானத்தையும் போக மோட்சத்தையுந் கொடுப்பதென்பது ஒரு கருத்து. சிவபெருமான் ஐந்தொழில்களையுஞ் செய்து உயிர்களைக் காக்கும் முறையைத் திருவிழாக்கள் வெளியிடுகின்றன. இவற்றுட் கொடியேற்றம் வரையுள்ள கிரியைகள் படைத்தலையும், வாகனத் திருவிழாக்கள் காத்தலையும், தேர்த் திருவிழா அழித்தலையும், மௌனோற்சவம் மறைத்தலையும், தீர்த்தம் அருளலையுங் குறிக்கும்.

எவ்வாறெனில், முதல்நாள் சரீரத்தை உண்டாக்குதலையும், இரண்டா நாள் நல்வினை தீவினையைப் பயன்படுத்துதலையும், மூன்றாநாள் முக்குணங்களை எழுப்புதலையும், நாலாநாள் உட்கருவிகளை முயற்பித்தலையும், ஐந்தாநாள் ஞானேந்திரியங்களை வசப்படுத்துதலையும், ஆறாம் நாள் ஆசை முதலியவைகளைக் கெடுத்தலையும், ஏழாநாள் எழுவகை மந்திரங்களைப் பதித்தலையும், எட்டாநாள் பாச ஞானம் நீங்குதலையும், ஒன்பதாநாள் மும்மலங்களையுங் கெடுத்தலையும், பத்தாநாள் சிவானந்தத்தைக் கொடுத்தலையுங் குறிக்குமென்பர். பத்து நாட்களுக்கு மேற்பட்ட திருவிழாக் காலத்தையும் அதிற் குறைந்த காலத்தையும், இத் தொழில்கள் அமையத்தக்கதாக வகுத்துக் கொள்ளலாம்."

இனி, உற்சவங்களின் உட்கருத்தை நாவலர் ஐயா அவர்கள் பின்வருமாறு விளக்கியுள்ளார்கள்.

"மகோற்சவ நாள் பத்தினுள், முதனாள் விழாத் தூலநீக்குதற் பொருட்டும், இரண்டா நாள் விழாத் தூல சூக்கும நீக்குதற்பொருட்டும், மூன்றா நாள் விழா மூவினையும், முப்புத்தியும், முக்குணமும், மும்மனமும், முக்குற்றமும், முப்பிறப்பும், முப்பற்றும் நீக்குதற்பொருட்டும், நாலா நாள் விழா நாற்கரணமும், நால்வகைத் தோற்றமும் நீக்குதற் பொருட்டும், ஐந்தா நாள் விழா ஐம்பொறியும், ஐந்தவத்தையும், ஐந்து மலமும், நீக்குதற் பொருட்டும், ஆறா நாள் விழாக் காமாதியாறும், கலையாதியாறும், வினைக்குணமாறும், பதமுத்தியாறும் நீக்குதற் பொருட்டும், ஏழா நாள் விழா எழுவகைப் பிறப்பும், கலாதிக ளேழும், மாயாமல குண மேழும் நீக்குதற் பொருட்டும், எட்டா நாள் விழா எண்குணமும் விளக்குதற் பொருட்டும், ஒன்பதா நாள் விழா மூன்றுருவும், முத்தொழிலும் மூன்றிடத் துரைத்தலும், இலையெனற் பொருட்டும்; பத்தா நாள் விழாப் பரானந்தமாக் கடலில் அமுத்துதற் பொருட்டுஞ் செயற்படுதலால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவோற்சவ காலத்துப் படிக்கலாகாதென்றார். இவையெல்லாம் விம்ப தந்திரத்திற் சிவோற்சவ படலத்திற் காண்க.''

## இரதோற்சவம் :

தேவாலயங்களில் நடைபெறும் இரதோற்சவத்தில் உபயோகிக்கப்படும் தேரின் தத்துவங்கள் யாவை என்பதைச் சதாவதானம் நா. கதிரைவேற்பிள்ளையவர்கள் அழகாக விளக்கியுள்ளார்கள்.

## இரதாரூட திருக்காட்சி :

''ஏழாநாளிலே இரதாரோகண திருக்காட்சியுண்டாம். இது சில ஆலயங்களிலே ஒன்பதாநாளினுஞ் செய்யப்படும்.

இதனுண்மையை விவரணம் பண்ணுங்கால், ஆதிகாலத்திலே, தடங்கருணைப் பெருங்கடலெந்தையாகிய சிவபெருமான், மந்தர கேசரி மலைகள் அச்சாகவும், சூரிய சந்திரர்கள் சக்கரமாகவும், ஆறிருதுக்கள் சந்தியாகவும், பதினான்குலோகமும் பதினான்கு தட்டுகளாகவும், ஆகாயம் ஆசனமாகவும், உதயாத்த மலைகள் கூவிரமாகவும், நதிகளும் நதங்களும் கொடிகளாவும், நக்ஷத்திரங்கள் விதானமாகவும், மோக்ஷலோகம் மேல்விரிவாகவும், யாகங்கள் சட்டங்களாகவும், நாள் முதலியன இடுக்கு மரமாகவும், அட்டமலைகள் தூண்களாகவும், அட்டயானைகள் தாங்குவனவாகவும், சத்தசமுத்திரங்கள் திரைச்சீலைகளாகவும், கன்ம ஞானேந்திரியங்கள் கலன்களாகவும், கலைகள் முளைகளாகவும், வேதாங்க உபாங்க மநுசாஸ்திரங்கள் மணிகளாகவும், வாயுக்கள் படிகளாகவும், நான்கு வேதங்கள் பூட்டப்படுங் குதிரைகளாகவும், அமைக்கப்பட்ட இரதத்திலே யெழுந்தருளி, கங்கை முதலிய தேவமாதர்கள் சாமரமிரட்டவும், ஊர்வசி முதலிய கணிகை மகளிர் நடனஞ் செய்யவும், மகாமேரு மலையை வில்லாகவும், சரசுவதியை வில்லிற் கட்டிய மணியாகவும், வாசுகியை நாணாகவும், விஷ்ணுவைப் பாணமாகவும், அக்கினி தேவனை அவ்வம்பின் கூர்வாயாகவும், வாயுதேவனை அம்பிறகாகவுங் கொண்டருளி, பிரமனாகிய சாரதி பிரணவமாகிய தூண்டுகோல் கொண்டு செலுத்த, திரிபுர அவுணர்களைத் தந்திருப் புன்னகையக்கினியால் நீறாக்கி யருளினார், என்னும் வரலாற்றுண்மையைக் காட்டுவதே இவ்விரதசேவைக் காட்சி என அநுமிக்கப்பட்டு விஸ்வரூபியாயும், விஸ்வகாரணராயும் விஸ்வசேவியராயும், விஸ்வாந்தரியாமியாயும், இருப்பவர் சிவபெருமானே யென்பதும், முப்புரமென்பது, ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலகாரியங்கள் எனவும், அத்திரிபுரங்களையும் நீறாக்கி, தாரகாக்ஷன் கமலாக்ஷன் வித்துன்மாலி என்னு மூவர்களையுந் தேவர்களையும் அடிமையாகக் கொண்டு அவர்கட்குத் தம்பதமருளி இன்பங் கொடுத்தமை மும்மலங்காரியங்களையுங் கெடுத்து விஞ்ஞானாகலர் பிரளயாகலர் சகலர் என்னு மூவகையான்மாக்களையும் அடிமையாகக்கொண்டு திருவடிமுத்தி கொடுக்கும் உண்மை எனவும், அறிய நின்றதனால் எல்லாமாய், அவைகட்குக் காரணமுமாய் நிற்கும் பரமபதியாகிய சிவபெருமானே ஆன்மாக்கட்கு மும்மலபந்த வாதனைகளைக் கெடுத்து, திருவடிப் பேறாகிய பேரானந்தப் பெருவாழ்வளிப்பார் என்பதும் உணரப்படும்.

திருமந்திரம்

**அப்பணி செஞ்சடை யாதி புராதனன்**
**முப்புரஞ் செற்றன னென்பர்கள் மூடர்கள்**
**முப்புர மாவது மும்மல காரிய**
**மப்புர மெய்தமை யாரறி வாரே.**

**நன்றி நயினாதீவு, நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமகள்
அழுத்தகம்
சுன்னாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org